1996 ஆகஸ்ட் 21]

திரு. சி. கோபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருந்ததியினர் பக்கத்தில் இருக்கிற ஆந்திர மாநிலம், ஓரிசா மாநிலம் போன்ற இடங்களில் இருந்து தனியார்கள் கொண்டு வருகின்ற மூங்கில்களை எடுத்துச் சென்று அந்த மூங்கில்கள் மூலமாக கூடை முடையும் தொழிலைச் செய்கிறார்கள். அப்படிச் செய்து வருகின்ற பொருட்களை எடுத்துச் செல்ல வனத் துறையினர் தடை விதிக்கிறார்கள். அந்தத் தடையை நீக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 190, திரு. வ. அன்பழகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

190—

'வி' சர்வீஸ் பேருந்துகள் இயக்குதல்

***684—திரு. வ. அன்பழகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு போக்குவரத்துக் கழகங்களில் 'ஜெ' சர்வீஸ் என்றும் 'ஜெ.ஜெ.' சர்வீஸ் என்றும் பேருந்துகள் இயக்கப்படுவதை மாற்றி, மக்களுக்குக் குழப்பம் ஏற்படாமல் இருக்க பழைய முறை 'வி' சர்வீஸ் என்று மாற்றப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மக்களுக்குக் குழப்பம் ஏற்படுவதைத் தவிர்க்க 'ஜே' 'ஜே.ஜே' 'ஆர்.ஆர்.' போன்ற வழித்தட எண்கள் மாற்றப்பட்டு புதிய வழித்தட எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. வ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் காலை, மாலை நேரங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதால் அலுவலகங்களுக்குச் செல்லக்கூடியவர்கள் உரிய நேரத்தில் செல்ல முடியவில்லை. எனவே, விரைவில் செல்ல பாயின்ட் டு பாயின்ட் சர்வீஸ் மற்றும் எல்.எஸ்.எஸ். சர்வீஸ் பேருந்துகளை விட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதே எல்.எஸ்.எஸ். சர்வீஸ், பாயின்ட் டு பாயின்ட் சர்வீஸ் ஓடிக்கொண்டிருக்கின்றன. சாதாரணப் பேருந்துகள், எல்.எஸ்.எஸ். பேருந்துகள், பாயின்ட் டு பாயின்ட் பேருந்துகள் ஆகிய 3 வகையான பேருந்துகள் ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 191, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

191—

தானியங்கி போக்குவரத்து சைகைக் குறிகள் நிறுவுதல்

***851—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் தானியங்கி போக்குவரத்து சைகைக் குறிகள் (Automatic Traffic Signals) எப்பொழுது நிறுவப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கோவை மாநகரில் தானியங்கி போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி இன்னும் மூன்று மாதங்களில் நிறைவடைந்து விடும்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் நகரமான கோவையில் போக்குவரத்து அதிகமாகி வருவதால் சாலை விபத்துக்களின் எண்ணிக்கையும் பெருகி வருகின்றன. எனவே, இதைக் கருத்தில் கொண்டு போக்குவரத்து சமிக்ஞை அமைக்கும் பணி விரைவுபடுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன். நகர்ப்புறப் பகுதிகளில் நெடுஞ்சாலைகள் மீதுள்ள உயரமான வேகத் தடைகளை அகற்ற இந்த அரசு முன்வருமா? அப்படி அகற்ற முடியவில்லை என்றால் அவைகள் இருப்பதை அறிவிக்கும் வகையில், இதுபோல சைகை விளக்குகளை அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS